1994 ஜனவரி 5]

தேவையான அளவுக்கு எடுத்துவிட்டு, மீதி பெட்டிஷன்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்று கூறினார்கள். வரும் நிதி ஆண்டில் இது பற்றி சிந்தித்து அதிக குறியீடு வைத்து அப்படிப்பட்ட ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த, எட்டாம் வகுப்பு படித்த பெண்கள் அனைவருக்கும் வழங்குவதற்கு பட்ஜெட்டில் நிதியை அதிகமாக ஒதுக்கீடு செய்ய ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரம்ப பெட்டிஷன்கள் வருகின்ற காரணத்தால் அவ்வளவுக்கும் நிதி ஒதுக்கீடு செய்வது என்பது இயலாத காரியமாகும். இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர் திரு. வேடியப்பன் அவர்களுடைய கோரிக்கை கவனத்தோடு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர் நலவாழ்வில் அக்கறை கொண்டு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களின் புகழ்மிக்க ஆட்சியில், இளம் பெண்களின் திருமணத்திற்கு உதவி தருவதற்கென சிறப்புத் திட்டங்கள் ஏதேனும் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய அரசு ஏறக்குறைய ஆறு திருமண உதவித் திட்டங்களை நடத்திக் கொண்டு இருப்பதால், இளம் பெண்களும் இந்தத் திருமண உதவித்திட்டத்தின் மூலமாகவே பயன்பெறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 170, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க கடைசியாக எடுத்துக் கொள்ளப்படும்.

வினா எண் 171, டாக்டர் பீட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்தறை அமைச்சர்.

171--

ஆபாச சினிமா சுவரொட்டிகளையும் மற்றும் விளம்பரங்களையும் தடை செய்தல்.

*11566 **டாக்டர் பீட்ரிக்ஸ் டி'சோசா :**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆபாச சினிமா சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு தடை செய்வது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) பெண்களை தவறாகப் பயன்படுத்தி வெளியிடப்படும் விளம்பரங்களை தடை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

முற்பகல் 10.40.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் , செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆபாச சினிமா சுவரொட்டிகளும், பெண்களை இழிவுப்படுத்தும் முறையில் செய்யப்படுகின்ற விளம்பரங்களும் அரசால் தடை செய்யப்பட்டு இருக்கின்றன. மேற்படி தடையை மீறி செயல்படுகின்றவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 292-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் மேற்படி குற்றங்கள் பெருகா வண்ணம் கட்டுப்படுத்துவதற்கும், நிகழாவண்ணம் கண்காணிப்பதற்கும், தொடராவண்ணம் தடுப்பதற்கும் காவல்துறை தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

Dr. BEATRIX D'SOUZA: Hon. Speaker, Sir, Madras is the only City in India where these giant-size obscene posters are exhibited. In 1994, the International Year of the Family, it is degrading to women to be seen as the objects of such giant-size posters. Moreover, the children also are exposed to such posters. If I am permitted, I will give you an example of such posters which are prominently displayed always on two particular cinema-theatres in Madras, viz. the Midland and the Casino. At present, there is a picture running in the Midland cinema-theatre, which I think has been renamed as Jayapradha Theatre. The name of the film is 'Bedroom Eyes-2' and it is depicted as 'free, frank, curious and fantastic'. It seems to be a Festival film with no cuts, showing sensational and sex scenes. The picture on the poster also is very explicit and vulgar. Another picture that has been advertised as 'grand Pongal attraction' is 'Kiss me--a thriller which is stimulating and provocative'. The children also see these posters because such posters are put up in front of schools. This has been going on for many years. In 1982, women's organisations made a representation to Government and there was a meeting. Subsequently, an Act known as the Tamil Nadu Acquisition of Hoardings Act was passed. Now, my contention is that there are two Acts for preventing these things. They are the Madras City Police Act and the Tamil Nadu

1994 ஜனவரி 5]

Open Places (Prevention of Disfiguration) Act. Under the present law, permission of the Collector of Madras has to be obtained for putting up posters in public places. Similarly, permission of the Commissioner, Corporation of Madras has to be obtained for putting up posters in private places. Moreover, in the Tamil Nadu Acquisition of Hoardings Act, 1985, there is provision for stopping the exhibition of hoardings. I would like to know why the Government, which has all the powers in their hands cannot prevent the exhibition of hoardings of the type mentioned by me, particularly by the cinema-houses.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆபாச சினிமா சுவரொட்டி மற்றும் பெண்களை இழிவுபடுத்தி செய்யப்படும் விளம்பரங்கள் உள்ளிட்ட குற்றங்களுக்காக இந்திய தண்டனை சட்டம் பிரிவு 292-ன்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1991 ஆம் ஆண்டு மட்டும் 84 குற்ற வழக்குகளும், 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம்

முற்பகல் 10.45

வரையில் 36 குற்ற வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. மற்றும் 1986 ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டு இருக்கிறது. அந்தச் சட்டத்தின் பிரிவு 3-ன்படி பெண்களை எந்த வகையிலும் இழிவு படுத்தும் வகையில் செய்யப்படும் விளம்பரங்கள், காட்சிப் பொருள்கள் மற்றும் பிரசுரங்கள் ஆகியன தடை செய்யப்பட்டவை ஆகும். இதனை மீறி செயல்படும் நபர்கள் முதல் தடவை குற்றம் புரிந்தவராயின் 2 ஆண்டுக்காலம் சிறை தண்டனையும், அடுத்தடுத்துக் குற்றம் இழைத்தால் 6 மாதத்திலிருந்து 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் ரூபாய் 10 ஆயிரம் முதல் ரூபாய் ஒரு இலட்சம் வரை அபராத தொகையும் விதிக்கப்படுவதற்கு பிரிவு 6 வழிவகை செய்கிறது. மேலும் விளம்பரங்களில் ஆபாசத்தை தடை செய்வதற்கு தமிழ்நாடு அரசு 1987-ல் கீழ்க்கண்ட 2 சட்டங்களை இயற்றி உள்ளது. தமிழ்நாடு கம்பல்சரி சென்சார்ஷிப் ஆஃப் ஃபிலிம் பப்ளிசிட்டி மெட்டீரியல் ஆக்ட், 1987; தமிழ்நாடு கம்பல்சரி சென்சார்ஷிப் ஆஃப் பப்ளிசிட்டி மெட்டீரியல் ஆக்ட், 1987. ஆகவே இந்தச் சட்டத்தின்படி திரைப்படங்களுக்காக செய்யப்படும் அனைத்து விளம்பரங்களும் கட்டாயமாக தணிக்கை செய்யப்பட்ட பிறகு தான் விளம்பரப்படுத்தப்பட வேண்டும். இந்தச் சட்டத்திற்குரிய விதிகள் இயற்றும் செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இதற்கான விதிகள் இயற்றப்பட்டு நடைமுறைபடுத்துகிறபோது ஆபாச விளம்பரங்கள் பெரிதும் கட்டுப்படுத்தப்படும். அதுமட்டுமல்லாமல்

சினிமா தியேட்டர்களில் வைக்கப்படுகின்ற அந்த ஆபாச நடவடிக்கைகளுக்காக ஆபாசத் திரைப்படங்கள் திரையிடும் உரிமையாளர்கள் மீது இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆபாசப் படங்கள் திரையிட்டமைக்காக உரிமையாளர்கள் மீது லைசென்ஸ் வழங்கும் அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஏறத்தாழ 47 லைசென்ஸ்தாரர்கள் மீது இதுவரைக்கும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட இழிவுபடுத்துகிற விளம்பரங்களோ, ஆபாச சுவரொட்டிகளோ ஒட்டுபவர்கள்மீது அரசாங்கம் கடுமையாக நடவடிக்கை எடுக்கும். அதற்கான சட்ட திருத்தங்களும் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், திருமதி பீட்ரிக்ஸ் டி.' சோசா அவர்களுடைய குறிப்பிட்ட கேள்வி, நீங்கள் சொன்ன இதுபோன்ற பல்வேறு சட்டங்கள் இருந்தும், 1987 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட--இது போன்ற தவறாக பயன்படுத்துகிற ஹோர்டிங்ஸ்ஸை எல்லாம் பறிமுதல் செய்வதற்குரிய சட்டம்---எல்லாம் இருந்தும், மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட் இருந்தும் கூட குறிப்பிட்ட சில படங்களுடைய விளம்பரங்கள் தற்போது சென்னை நகரத்தில் ஒட்டப்பட்டிருக்கிறதே, அதன்மீது நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்கிறார். அதற்கு பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் தடையுத்தரவு இருப்பதால் தீவிர நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

Dr. BEATRIX D'SOUZA: Hon. Speaker, Sir, I would like to know whether the size of such posters could be ordered to be reduced. Very often, these posters pose traffic hazards and cause accidents because the motorists are likely to look at these posters.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெரிய அளவில் அத்தகைய போஸ்டர்கள் ஒட்டுவதையாவது தடை செய்ய முடியுமா என்று கேட்கிறார்..

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து பரிசிலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி. ராஜூ.

திரு. கே.பி. ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் சினிமாக்களும், ஹிந்தி சினிமாக்களும் ஆபாச சுவரொட்டிகள் ஒட்டினால் அதைத் தடை செய்ய சட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்போல திரைப்படம்

1994 ஜனவரி 5]

என்ற பெயரில் வெளிநாட்டுப் படங்கள்தான் அதிகமாக தமிழ்நாட்டில் ஆபாசங்களைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. முத்தக் காட்சிகள் போன்ற காட்சிகள் எல்லாம் இருக்கிறபோது குழந்தைகள் மற்றும் பள்ளி மாணவர்கள் பார்க்க நேரிடுகிறது. ஆகவே வெளிநாட்டு சினிமா வால் போஸ்டர்களை தடை செய்ய இதே சட்டம் வழிவகை செய்யுமா, தடை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த நாட்டு படங்களானாலும், எந்த மொழிப் படங்களானாலும் அதிலே ஆபாசம் இருந்தால் தடை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆபாச சுவரொட்டிகள் ஒட்டக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால் தியேட்டர் அதிபர்கள் எல்லாம் ஆபாச சுவரொட்டிகள் ஒட்டுகிறார்கள். ஒட்டியவுடன் ஒரு தாளை வைத்து மறைக்கிறார்கள். அந்தத் தாளுக்குள் என்ன படத்தில் இருக்கிறது என்று பார்க்க விரும்புகிறார்கள் ரசிகப் பெருமக்கள். அது தடை செய்யப்படுமா? அதுமட்டுமல்லாமல் சினிமா உலகத்தில் இப்போது புகழ் பெற்றிருக்கிற நடிகைகள் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த குறிப்பிட்ட நடிகைகள் பெயர் எல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதெல்லாம் வேண்டாம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நடிகை நடிகருடைய அனுமதி இல்லாமல் மதுவை குடிப்பதைப்போல, சிகரெட் குடிப்பதைப்போல, பல்வேறு ஜவுளிக்கடைகளில் வியாபாரம் செய்வதைப்போல பலர் அவர்களை கேட்காமல் விளம்பரம் செய்கிறார்கள். அவர்கள் அரசிடம் முறையிட்டால் அவர்கள் மீது, அந்த விளம்பரதாரர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் தெரிவிக்கப்படுமானால் சட்டத்தின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பொது மக்களுக்காக உழைக்கிற சமூக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நலவாதிகள், அரசியல்வாதிகள், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களைப் பற்றி மிகக் கேவலமான முறையில் விமர்சிப்பதை, மக்கள் மத்தியில் உழைக்கிற அந்த மாபெரும் சமூகநலவாதிகளுக்கு ஏற்படுகிற அவமானங்களை தடுக்க அரசு. . . .

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும். இது சுவரொட்டி பற்றியது. போதும், ஆபாசத்தைப் பற்றி இதற்கு மேலே வேண்டாம்.

வினா எண் 172 திரு. சோ. இராசாராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் ச. ஆரோக்கியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

172--

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தற்கால கல்விசார் பணியாளர்களை பணி நிரந்தரமாக்குதல்.

**9130–திரு சோ. இராசாராமன் :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் தற்காலிக கல்விசார் பணியாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). தற்காலிகமாக பணியாற்றிய 26 பேர்களுக்கு நிரந்தரப் பணி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இன்னும் சில பேர்கள் கல்விசார் பணியாளர்களாக இருக்கிறார்கள். அவர்களை பெர்மனென்ட் செய்வதற்கு அரசு மீண்டும் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள் ஊதியத்தில் 6 பேர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது தொகுப்பு ஊதிய அடிப்படையில் நியமனம் பெற்று இருக்கிறார்கள். அவர்களைத் தவிர, தற்காலிகமாக ஆய்வாளர்கள் யாரும் பல்கலைக்கழகப் பணியில் இல்லை. ஆட்சிக் குழுவின் ஒப்புதல் பெற்றும், அவ்வப்போது எழும் தேவைகளுக்கு ஏற்பவும், நிதி நிலைமைக்கு ஏற்பவும் மேற்கண்ட 6